# இளைஞர்களுக்கு உயர்கல்வி, வேலைவாய்ப்பை வழங்கி வருவது தி.மு.க. அரசு!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!



திண்டுக்கல், ஜன. 26 - அகரம் பேரூராட்சியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டு கழக இளைஞரணியினர் 400 பேர் அமைச்சர் ஐ.பெரியசாமி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

அப்போது அவர்களை வாழ்த்திப் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழகத்தில் இளைஞர்களுக்கு உயர் கல்வி, வேலை வாய்ப்பை வழங்கி வருவது கழக அரசு என்று பெருமிதமாக கூறினார்.

கழகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதல் கழகத் தலைவர், தமிழக முதல்வர் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரை கழகத்தில் இளைஞர்களாக இருந்து இன்று உயரிய லைக்கு வந்தவர்கள். அவர்களைப்போல் இன்று கழகத்தில் இளைஞரணியினராக நியமிக்கப்பட்ட நீங்கள் தான் நாளை கட்சியை வழி நடத்தப் போகிறீர்கள். உங்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது.

ஆத்தூர் தொகுதியைப் பொறுத்தவரை இளைஞர்களுக்குத்தான் அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் உங்கள் பணி வெற்றி பணியாக சிறக்க வேண்டுமென வாழ்த்தினார்.

நிகழ்ச்சியின்போது கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால்உசேன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன் ஆத்தூர் தொகுதி தலைமைக் கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், முருகேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், கலைராஜன், திண்டுக்கல் மாநகர பொறுப்பாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, துணைத் தலைவர் ஜெயபால், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய துணைச் செயலாளர் சுமதி கணேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செல்வம் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, அன்னம்பட்டி காணிக்கை சாமி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப் மற்றும் இளைஞரணியினர் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் கழக ஆட்சி செய்வதில்லை! பொங்கலுக்கு

# கரும்பை நான்காக வெட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சி!

## பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி பதிலடி!



சென்னை, ஜன. 26 - சட்டப் பேரவையில் பதிலளித்த அமைச்சர் அர.சக்கரபாணி, பொங்கலுக்கு கரும்பை நான்காக வெட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சி என்ற குறிப்பிட்டார்.

இதுகுறித்து, பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.பி. உதயகுமார்:** இந்த ஆண்டு, 2026 ஆம் ஆண்டு தேர்தலும் வருகிறது, பொங்கல் பரிசு அறிவிப்பும் வருகிறது. ஆக, தேர்தல் வந்ததால்தான் இந்த அரசுக்கு மக்கள் ஞாபகம் வருமா என்று தமிழ்நாட்டு மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** உறுப்பினருக்கு ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன். அ.தி.மு.க. அரசு நடைபெற்றபொழுது பள்ளி மாணவர்களுக்கு வழங்கிய முட்டை எல்லாம் ரத்து செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு கொடுத்த கட்டணமில்லா மின்சாரம் ரத்து செய்யப்பட்டது. அதற்கு பிறகு தேர்தல் வந்த போதுதான் அது வந்தது. கண் கெட்ட பிறகுதான் சூரிய நமஸ்காரம் செய்தார்கள் இவர்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** பொங்கல் பரிசு தொகுப்பு கொடுத்தோம் என்று பேசினார்கள். மதுரை மாவட்டம், மேலூரில் நிறைய கரும்பு விளைகிறது. ஒரு கரும்பை நான்காக வெட்டி யாராவது பொங்கல் கொண்டாட முடியுமா? சரித்திர சாதனை படைத்தது நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து முழு நீள கரும்பு கொடுத்திருக்கிறார்கள். உங்கள் ஆட்சியில் ஒரு கரும்பை நான்காக வெட்டி கொடுக்கவில்லையென்று சொல்லுங்கள் பார்க்கலாம். கொடுத்தீர்களா, இல்லையா? தமிழ்நாட்டு மக்கள் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) ஒரு கரும்பை நான்காக வெட்டி பொங்கலுக்கு கொடுத்தால் எப்படி பொங்கல் கொண்டாட முடியும். (குறுக்கீடுகள்)

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு கரும்பை மூன்றாக, நான்காக வெட்டித் துண்டா கொடுத்தார்களா, இல்லையா என்பதை ஒப்புக்கொள்கிறார்களா, இல்லையா என்பதை மட்டும் சொல்லச் சொல்லுங்கள்.

**அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன்:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே கொரோனாவுக்காக அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.4,000/- கொடுத்தார்கள். அதேபோல, 2023 பெருமழை பெய்தபோது சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அத்துனை ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.6,000/- கொடுத்தார்கள். அதனால், கடந்த ஆண்டு தான் ரூபாய் கொடுக்க முடியாமல் போனது, அதற்கு நிதிநிலை ஒரு காரணம். ஆகவே, தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் எங்கள் தலைவர் செய்வது கிடையாது. கொரோனாவால் தாய், தகப்பனை இழந்த பிள்ளைகளுக்கு ஒவ்வொருவர் பெயரிலும் ரூ.5 இலட்சம் account-ல் போட்டிருக்கிறோம். அதேபோல, ஒரு தாய், ஒரு பெற்றோரை இழந்தவர்களுக்கு ரூ.3 இலட்சம் கொடுத்தோம். அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கிறோம். ஆகவே, நாம் செய்கிற அன்புக் கரங்கள் திட்டமாக இருந்தாலும் தேர்தலை வைத்து எந்த திட்டமும் இந்த ஆட்சி செய்வதில்லை. எங்களுடைய தலைவர், நம்முடைய மக்கள் நலனுக்காகத் தான் செய்கிறார்கள்.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** கொரோனா காலத்தில் எல்லோருமே ஊரை விட்டு, வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்று சொல்லி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது பிறப்பித்தீர்கள். அப்போது எங்கள் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது என்ன சொன்னார், மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000/- கொடுங்கள் என்று சொல்லி சட்டமன்றத்திலும் பேசினார்கள்; மக்கள் மன்றத்திலும் பேசிப் பார்த்தார்கள். நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள். மறுபடி பலமுறை கேட்டுப் பார்த்தார்கள். ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தீர்கள். கொடுக்கவில்லை. பலமுறை சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், முதலமைச்சர், எங்கள் தலைவர் என்ன சொன்னார்; நீங்கள் தரவில்லை, நாங்கள் ஆட்சிக்கு வந்தபின்பு முதல் கையெழுத்து போட்டு, ரூ.5,000/- கொடுக்கச் சொன்னேன், நீங்கள் கொடுக்கவில்லை. ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தீர்கள். ரூ.4,000/- நான் கொடுப்பேன் என்று சொல்லி முதல் கையெழுத்து போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 2 கோடியே 9 இலட்சம் பேருக்கு ரூ.4,000/- கொடுத்தார்கள். அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 14 வகையான மளிகைப் பொருட்களையும் கொடுத்தவர், இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அது தேர்தலுக்காக நாங்கள் கொடுக்கவில்லை. அப்போது 2021-ல் தேர்தல் நடக்கவில்லை. சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றியவர்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! தஞ்சையில்

# டெல்டா மண்டல தி.மு.க. மகளிர் மாநாட்டில் மகளிர் பெருந்திரளாக பங்கேற்போம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை. ஜன.26 - நாகை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட கழகப் பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், கழக விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே. வேதரத்தினம், கழக தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல. மேகநாதன், க.மறைமலை, ஆகியோர் முன்னிலை வைத்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில்

மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், ஆர். டி.எஸ். சரவணன், கே.பழனியப்பன், சிக்கல் என். ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன் சோ.பா.மலர்வண்ணன், நகர் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், எஸ்.பன்னீர்செல்வம், இல.பழனியப்பன், உமா செந்தாமரைசெல்வன், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான், சி.சுப்பரமணியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ப.உதயக்குமார், ஆர்.துரைராஜ், கேஸ் வீ.செந்தில், கே.எஸ். சாகுல்ஹமீதுராஜா, பி.முருகானந்தம், க.சக்தியமூர்த்தி, எஸ்.பால்ராஜ், வ.கமல், த.தமயந்தி, புவனேஸ்வரி செந்திகுமார், எஸ்.வெற்றிச் செல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தாமோதரன், டேனியல் சத்தியா ஆகியோர் கொண்டனர்.

முடிவில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் கற்பகம்நீலமேகம் நன்றி கூறினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்தஞ்சாவூரில் வரும் 26.01.2026 அன்று டெல்டா மண்டல 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' தஞ்சை மண்டல மகளிர் மாநாடு தஞ்சையில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி.களிலிருந்து அதிகளவில் மகளிர் கலந்து கொள்ள செய்வது எனவும், மாநாட்டில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் மகளிர்களை கலந்து கொள்ள செய்வதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர,பேரூர் செயலாளர்கள் மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என்றும். மாநாட்டிற்கு கலந்து கொள்ள உள்ள மகளிர் பட்டியலில் உள்ள அனைத்து மகளிரும் குறித்த நேரத்தில் மாநாட்டில் கலந்து கொள்ள செய்திட வேண்டும் என்றும் 1

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம், தோழி விடுதிகள், புதுமைப்பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் என எண்ணற்ற மகளிர் மேம்பாட்டுத்திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டுப் பெண்களை உலகளவில் 'வெல்லும் தமிழ்ப்பெண்களாக' மாற்றியுள்ள கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் வென்று திராவிட மாடல் 2.0 அமைந்திடும் வகையில், நமது திராவிட மாடல் அரசு பெண்களுக்குச் செய்துள்ள சாதனைத் திட்டங்களைப் பெண்களின் முழுமையான ஆதரவு கழகத்திற்கு மட்டுமே என்ற நிலையை உறுதி செய்திட வேண்டும் எனவும் இந்த பணியை பிப்ரவரி 1ஆம் தேதி தொடங்கி மார்ச் 8ஆம் தேதி வரைக்கும் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலம் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்குட்பட்ட வீடுகளில் வீடு, வீடாகப் பரப்புரை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அதுபோது கழக அரசின் மகளிர் நலத் திட்டங்களை எடுத்துக்கூறியும், சாதனைத் திட்டங்களின் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் மக்களிடம் கழகத்திற்கான ஆதரவை திரட்டிட வேண்டும் எனவும், இந்தப் பரப்புரை மூலம் பெண்கள் வாக்கு சிந்தாமல் சிதறாமல் முழுமையாக கழகத்திற்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும்

பிப்ரவரி1 முதல் பிப்ரவரி28 வரை தமிழ்நாடு முழுவதும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரையை மேற்கொள்ளும் வகையில் நட்சத்திரப் பரப்புரையாளர்களைக் கொண்டு நாகை, கீழ்வேளூர் வேதாரணியம் ஆகிய சட்டமன்றத் தொகுதியிலும் குறைந்தபட்சம் நான்கு இடங்களில் தெருமுனை கூட்டங்கள் அல்லது அரங்கக் கூட்டங்களாக நடத்தி பரப்புரை செய்வதுடன், தலைகுனியாது' பரப்புரையை வெற்றியடையச் செய்திடுவது என்றும்,

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் அறிவித்த திராவிட பொங்கல் விழாவை ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் சிறப்பாக நடத்திட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு ஒன்றிய நகர பேரூர் பகுதியில் தேர்வு செய்யப்பட்டவர்களை கொண்டு நாகையில் மாவட்ட அளவில் ஓட்டப்பந்தயம் போட்டி, வாலிபால், கிரிக்கெட் போட்டி, கபடி போட்டி ஆகிய வற்றை மாவட்ட கழகத்துடன் இணைந்து சிறப்பாக நடத்திக்க விளையாட்டு மேம்பாட்டு அணியினர் மற்றும் அனைத்து கழக நிர்வாகிகள், நடுவராக பணியாற்றிய கழக நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### திருவரங்கம் அரசு கல்லூரியில்

# கூடுதல் வகுப்பறைகள் - உள் கலையரங்கம் கட்ட நடவடிக்கை!

## பேரவையில் அமைச்சர் கோவி.செழியன் தகவல்!



சென்னை, ஜன.26- உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேரவையில் மொ. பழனியாண்டி எழுப்பிய திருவரங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் உள் கலையரங்கம் அமைக்க அரசு முன் வருமா? என்ற கேள்விக்கு அளித்த பதிலுரை:

முல்லைப் பெரியாறு அணை என்றால் பென்னி குவிக் வரலாறும், கல்லணை என்றால் கரிகாலச்சோழன் வரலாறும் எழுதப்பட்டிருப்பதை போல, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதி மக்களின் குடிநீர் தாகத்தை போக்க செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் "மாமல்லன்" புதிய குடிநீர் தேக்கத்தை கட்டிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்து, திருவரங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக வகுப்பறைக் கட்டடம் கட்டுவதற்கான உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் உள் கலையரங்கம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை பேரவை தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக 2011-12-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பின்னர், 2020-21-ஆம் ஆண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகமாற்றம்செய்யப்பட்டது.

இக்கல்லூரியில், தற்போது 8 இளநிலை பட்டப்படிப்புகள் மற்றும் 4 முதுநிலை பட்ட மேற்படிப்புகளுடன் இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் சுமார் 1,400 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். மாணாக்கர்களின் தேவையறிந்து இவ்வரசு பொறுப்பேற்றவுடன் பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 10 வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கு சுமார் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு தற்போது மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது. மேலும், இக்கல்லூரியில் 150 மாணாக்கர்கள் அமரும் வகையில் ஒரு மினி செமினார் ஹால் கருத்தரங்கக் கூடம் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரிக்கு உள்கலையரங்கம் அமைப்பதற்கான தேவை தற்போது ஏதும் எழவில்லை.

இருப்பினும், தேவை ஏற்படின் நிதிநிலைக்கு ஏற்ப வரும் கல்வியாண்டுகளில் முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று அமைத்துத் தரப்படும் என்று பதிலுரையாற்றினார்.

### திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு

# தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் வருகை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, ஜன. 26 - திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்து கேட்பு கூட்டம் 27.01.2026 தேதி செவ்வாய் கிழமை மாலை: 4.00 மணியளவில் ஜமால் முகமது கல்லூரி கலையரங்கில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர், திருச்சி கிழக்கு, மணப்பாறை, சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்கள்,சிறு குறு தொழில் முனைவோர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், BHEL, OFT, HAPP, பொதுத்துறை நிறுவனங்களின் தொழிற்சங்க பிரதிநிதிகள், பெண்கள் நல அமைப்பு நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், சமூக நல ஆர்வலர்கள், நகர்நல சங்கத்தினர்கள், நிர்வாகிகள், மாற்றுதிறனாளிகளின்கள், திருநங்கைகளின் அமைப்பு நிர்வாகிகள் திருச்சி காந்தி மார்க்கெட் அனைத்து மொத்த மற்றும் சில்லறை வியாபாரி சங்க நிர்வாகிகள் மணப்பாறை சுற்று வட்டார பகுதிகளின் முறுக்கு மொத்த வியாபாரம் செய்யும் கூட்டமைப்பு நிர்வாகிகள் உலகப் புகழ்பெற்ற மணப்பாறை மாட்டுச்சந்தை வியாபார நிர்வாகிகள், பூ உற்பத்தி சங்க நிர்வாகிகள், அனைவரும் வருகை தந்து தங்களது கோரிக்கைகமனுக்களை மனுவாகவோ, நேரிடையாக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் தேரில் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு :- மேற்கண்ட சங்கத்தினர் தனி நபர்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களுடன் நிகழ்விடத்திற்கு அழைத்து வந்து மனுக்களை கொடுக்க வைப்பதற்கான தேவையான உதவிகளை திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம், கீழஅருணாச்சலபுரம் கிராமத்தில் ரூ.16.50லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், கிழக்கு ஒன்றிய செல்வராஜ், புதூர் மத்திய ஒன்றிய தேர்தல் பார்வையாளர் மாரிமுத்து, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.